பதிவு எண் M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 20] சென்னை: ஆவணி 8 (24—8—72) வியாழன் வெளியூர்: ஆவணி 9 (25—8—72) வெள்ளி [இதழ்: 60

பட்டு நூல் நெசவாளருக்கு ஊதியநிர்ணயக் குழு

சென்னை, ஆக. 24—

தமிழ்நாட்டில் கைத்தறி நெசவாளர்களுக்குக் குறைந்தபட்ச சம்பளத்தை நிர்ணயிக்க அரசு ஏற்கனவே குழு ஒன்றை அமைத்திருக்கிறது; அதேபோல் பட்டு நூல் நெசவாளர்களின் குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயிக்கவும் தனிக் குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது.

இக்குழுவில் 6 பேர் உறுப்பினர்களாக இருக்கின்றனர்.

மத்திய அரசின் முரண்பட்ட செயல்

'அளிக்கப்பட்ட வாக்குறுதி ஏன் காப்பாற்றப்படவில்லை'

மக்களவையில் இரா. செழியன் எழுப்பிய வினா

இந்திப் பெயர்களுடன் அனுப்பப்பட்ட கடிதங்கள் பற்றி உள்துறை துணையமைச்சர் வியப்பு -- பிரச்சினை பற்றி விரிவாக விசாரிப்பதாக உறுதி

புதுடில்லி, ஆக. 24—

"அமைச்சர்களின் பெயர்கள் (அமைச்சகப் பெயர்கள்) ஆங்கிலத்திலேயே இருக்கும்; அவற்றின் இந்தி வாசகங்கள் அடைப்புக்குள் குறிக்கப்படும் என்று மத்திய அரசு, முன்பு வாக்களித்திருந்தது; ஆனால் அந்த வாக்குறுதி காப்பாற்றப்படவில்லை' என்று மக்களவையில், நாடாளுமன்ற தி. மு. க. குழுத் தலைவர் இரா. செழியன் அவர்கள் புகார் கூறினார்.

இந்தப் புகாருக்கு ஆதாரமாக இந்திப் பெயர்களை மட்டும் போட்டு தனக்கு வந்த ஒரு கடிதம் உட்பட சில கடிதங்களை இரா. செழியன் காட்டினார்.

மத்திய அரசிடமிருந்து தஞ்சையில் உள்ள ஒருவருக்கு வந்த கடிதத்தில் ரோமன் லிபிக்குப் பதில் தேவநாகிரி லிபியில் – இந்தியில் நிதித்துறை அமைச்சகப் பிரிவு குறிப்பிட்டிருந்ததையும் அவர் சுட்டிக்காட்டினார்; இதில் அரசாங்கத்தின் வாக்குறுதி என்னவாயிற்று?' என்று அவர் வினவினார்.

தாக்கீது ஏதும் அனுப்பவில்லையாம் -- உறுதிமொழிகளை மதித்தே நடப்பராம்

"மத்திய அமைச்சர்களை -- அவர்களுடைய இந்திப் பதவிப் பெயர்களில் அழைக்க வேண்டும் என்று மத்திய அரசு தமிழ்நாடு அரசுக்குத் தாக்கீது எதுவும் அனுப்பவில்லை" என்று உள்துறை துணையமைச்சர் ராம் நிவாஸ் மிர்தா கூறினார்.

தி. மு. கழக உறுப்பினர்களின் பல கேள்விகளுக்கு அமைச்சர் பதிலளிக்கையில், இதுபோன்ற கருத்து எப்படிப் பரவியது என்பது குறித்து வியப்புத் தெரிவித்தார்.

"அதேபோன்று, 'மாநில அரசுகள் மத்திய அரசுடன் நடத்தும் கடிதப் போக்குவரத்துக்கள் இந்தியில்தான் இருக்கவேண்டும்' என்றும் தாக்கீது எதுவும் அனுப்பவில்லை; அப்படி அனுப்பியதாகச் சொல்வது சரியல்ல" என்றார்.

"நாடாளுமன்றத்தில் நிறைவேறிய தீர்மானங்களையோ அல்லது மொழிப் பிரச்சினைமீது அளித்த உறுதிமொழிகளையோ மத்திய அரசு மீறவில்லை; அந்த உறுதிமொழிகளை மதித்தே நடக்கும்" என்றார்.

"அவைக்குத் தந்துள்ள வாக்குறுதிப்படி நடக்குமாறு எல்லா அமைச்சகங்களுக்கும் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது; திரு. இரா. செழியன் அவர்கள், குறிப்பாகச் சில பிரச்சினைகளை அரசின் கவனத்துக்குக் கொண்டுவந்திருப்பதால், அவற்றை விரிவாக விசாரிப்பதுடன், அது பற்றிக் கவனம் செலுத்துவதாகவும் உறுதியளிக்கிறேன்" என்றும் குறிப்பிட்டார்.

ஆங்கிலத்திலேயே கடிதப் போக்குவரத்து -- மத்திய இணையமைச்சர் தகவல்

"மத்திய அரசாங்கத்திற்கும் – இந்தியை ஆட்சிமொழியாகக் கொள்ளாத மாநிலங்களுக்கும் இடையே ஆங்கிலத்திலேயே கடிதப் போக்குவரத்து நடைபெறும்" என்று நாடாளுமன்ற மேலவையில், மத்திய கல்வித்துறை இணையமைச்சர் கே. எஸ். இராமசாமி ஜே. பி. யாதவ் என்பவர் எழுத்துமூலமாகக் கேட்ட கேள்வி ஒன்றுக்கும் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

"இந்தியின் வளர்ச்சிக்கும் -- அதன் பிரச்சாரத்திற்கும் ஆங்கிலமே ஆதார அம்சமாகும் என்று கூறுவது சரியல்ல" என்றார் அமைச்சர்.

மக்களவை உறுப்பினர் எண்ணிக்கை உயரும்

இனி 10 இலட்சம் மக்களுக்கு ஒருவர் பிரதிநிதியாக இருப்பார்

நாடாளுமன்றத்தில் மசோதா வருகிறது

புதுடில்லி, ஆக. 24—

மக்களவை உறுப்பினர்கள் எண்ணிக்கையை இப்போதுள்ள 526-லிருந்து 570 ஆக உயர்த்துவதற்கான அரசியல் சட்டத் திருத்த மசோதா நாடாளுமன்ற நடப்புக் கூட்டத் தொடரில் வரும்.

மக்களவையில் ஆக. 29-ம் நாளன்றும், மாநிலங்களவையில் செப். 2-ம் நாளன்றும் விவாதத்துக்குவரக்கூடும்.

அரசியல் சட்டத்தின் 81-வது பிரிவைத் திருத்துவதன் மூலம் இதற்கு வழிகோலப்படும்; 550 பேர் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளாக இருப்பர்; நியமன உறுப்பினர்கள் உட்பட மத்திய நிர்வாகப் பகுதிகளின் உறுப்பினர்கள் எண்ணிக்கை 20 என நிர்ணயிக்கப்படும்.

தேர்தல் கமிஷன் 600 உறுப்பினர்கள் என்று பரிந்துரைத்திருந்தது; ஆனால் அரசாங்கம் அதை ஏற்கவில்லை; அதற்குப் பல காரணங்கள் இருப்பினும், இப்போதுள்ள மக்களவையில் சில மாறுதல்கள் செய்தால்தான் அதிகபட்சம் 570 உறுப்பினர்கள் அமருவதற்கான இடம் இருக்கும்; இப்போது 537 இடங்கள்தான் இருக்கின்றன.

மசோதா நிறைவேறி -- அது சட்டத்தில் இடம் பெறுவதற்கான அரசியல் நடைமுறைகள் முடிந்ததும், தொகுதி நிர்ணயக் கமிஷன் நியமிக்கப்படும்; அது மக்களவை தொகுதிகளைப் புதிதாக வரையறுக்கும்.

முதல் மக்களவையில் 499 பேர் இருந்தனர்; மாநில சீரமைப்புக்குப்பின் 513 ஆகியது; புதுவை, கோவா விடுதலைக்குப் பின் 523 ஆகியது.

இந்தக் கூட்டத் தொடரிலேயே மசோதா நிறைவேறினாலும் கூட 1976-ல் புதுவையில் தேர்தலின்போதுதான் இது நடைமுறைக்கு வரும்.

நாடாளுமன்ற மேலவையில் கழக உறுப்பினர் கே. ஏ. கிருஷ்ணசாமி கேள்வி

சேதுக் கால்வாய் திட்டம் நிறைவேற்றப்படுமா?

இன்னமும் ஐயத்திற்குரிய நிலை

'திட்டக்குழு இன்னமும் ஏற்றுக்கொள்ளவில்லை' என்கிறார் பொறுப்புள்ள அமைச்சர்

எவ்வளவு பணம் செலவாகும் -- இலாபகரமாக இருக்குமா என்பதும் பிரச்சினையாகிறது

புதுடில்லி, ஆக. 27—

சேதுக் கால்வாய்த் திட்டம் தொடங்கப்படுவது பற்றி நாடாளுமன்ற மேலவையில் கேள்விகள் எழுப்பப்பட்டன.

தமிழ்நாட்டுக்கும்--இலங்கைக்கும் இடையில் உள்ள கடலை ஆழப்படுத்திக் கப்பல் போக்குவரத்துக்கு வகைசெய்யும் திட்டமாகும் இது; இந்தத் திட்டம் நிறைவேறினால், மேற்குக் கடற்கரையிலிருந்து கிழக்குக் கடற்கரைக்கு (வங்காள விரிகுடாக கடலிலிருந்து அரபிக் கடலுக்கு)க் கப்பல் போக்குவரத்துத் தூரம் வெகுவாகக் குறையும்--பயண நேரமும் குறையும்.

கே.ஏ. கிருஷ்ணசாமி கேள்வி

"இந்தத் திட்டம் எப்போது தொடங்கப்படும்?" என்று கழக உறுப்பினர் கே.ஏ. கிருஷ்ணசாமி கேட்டார்.

அதற்குப் பதிலளிக்கையில் கப்பல் போக்குவரத்து அமைச்சர் ராஜ்பகதூர் கூறியதாவது:—

"சேதுக் கால்வாய்த் திட்டம் நிறைவேறினால், கப்பல் பயண தூரமும் நேரமும் குறையும் என்பது உண்மைதான்; ஆனால், இந்தத் திட்டத்துக்கு எவ்வளவு பணம் செலவாகும் -- இலாபகரமான திட்டமாக இருக்குமா என்பதுதான் முக்கியமான பிரச்சினை.

இந்தத் திட்டத்தை, திட்டக் குழு இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை; இந்தத் திட்டத்தைத் திட்டக் குழு ஏற்க வேண்டும் என்பதே எனது விருப்பமாகும்.'

அவர் மேலும் கூறியதாவது:—

துறைமுகங்கள் எவ்வளவு?

"இந்தியாவில் தற்போது 8 பெரிய

(4-ம் பக்கம் பார்க்க)

தஞ்சை அரண்மனை

சென்னை, ஆக. 23—

"தஞ்சை அரண்மனையிலுள்ள கூடகோபுரம் பழுதடைந்த நிலையில் உள்ளது; அதுவும், அரண்மனையைச் சேர்ந்த வேறு சில பகுதிகளையும் பழுதுபார்க்கும் பணி விரைவில் மேற்கொள்ளப்படும்"

என்று சட்டப் பேரவையில், மாயவரம் என். கிட்டப்பா கேள்விக்குப் பதிலளிக்கையில் கல்வி அமைச்சர் நாவலர் கூறினார்.

"தஞ்சை அரண்மனை, மாநில அரசின் பாதுகாப்பில் உள்ளது; பழுதுபார்க்கும் வேலைக்காக அது தொல்பொருள் ஆராய்ச்சித் துறையிலிருந்து பொதுப் பணித் துறைக்கு மாற்றப்பட்டுள்ளது" என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

குடிசைப் பகுதி மேம்பாட்டுக்கு நிதி

மத்திய அரசு ஒதுக்கீடு

புதுடில்லி, ஆக. 23— பெரிய நகரங்களிலுள்ள குடிசைப் பகுதிகளின் சூழ்நிலையை மேம்படுத்துவதற்காக மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்து வருகிறது.

இந்தத் திட்டத்தின்படி நடப்பு நிதியாண்டில் சென்னை மாநகரத்துக்கு ரூ. 2.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

ஏற்கனவே ரூ. 84 இலட்சம் மதிப்புள்ள திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டது; இதில் முதல் தவணையாக ரூ. 21 இலட்சம் மாநில அரசுக்கு வழங்கப்பட்டிருக்கிறது; மீதமுள்ள தொகை, அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களின் முன்னேற்றத்தையொட்டி வழங்கப்படும்.

சிறுவர்களுக்கான திரைபட அரங்குகள்

மாவட்டத் தலைநகர்களிலும் ஏற்படுத்த யோசனை

சென்னை, ஆக. 22— சிறுவர்களுக்கான திரைப்பட அரங்கு தியேட்டர் கட்டுவது பற்றிச் சட்டப்பேரவையில் கேட்கப்பட்ட கேள்விகளும் — முதலமைச்சர் அளித்த பதில்களும் வருமாறு:—

பி.எஸ். மணியன் (தி. மு. க.):— மதுரையில் சிறுவர் திரை அரங்கம் அமைக்கும் எண்ணம் உண்டா? மாவட்டத் தலைநகரிலும் அவ்வாறு அமைக்கப்படுமா? சிறுவர்களுக்குத் தேவையான பொது அறிவு வளர்ச்சி சம்பந்தமான படங்கள் காட்டப்படுமா?"

முதல்வர்:—" மதுரையில் சிறுவர் திரை அரங்கம் கட்டும் எண்ணம் இருக்கிறது அப்படிப்பட்ட படங்களைக் காட்டுவதோடு பொதுமக்கள் நன்மைக்கான இசை நிகழ்ச்சிகள் — கலை நிகழ்ச்சிகள் போன்றவை நடத்த அனுமதிப்பதன் மூலம் வரும் வருமானத்தைக்கொண்டு அந்த அரங்கங்கள் கவனிக்கப்படும்."

"அந்தந்த மாவட்டத் தலைநகரங்களில் இதற்கான இடவசதிகள் — நிலத்தின் தன்மை போன்றவைகளைக்குறித்து விளக்கம் அனுப்புமாறு வட்டாரப் பொதுமக்கள் தொடர்பு அதிகாரிகள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"சென்னையில் இப்போது புதுப்பிக்கப்பட்டு வரும் கலைவாணர் அரங்கம் 5 அல்லது 6 மாதங்களுக்குள் வேலைமுடிந்து மீண்டும் திறக்கப்படும்."

கடும் மின்சாரப் பற்றுக்குறை

மத்திய அமைச்சர் அபாய அறிவிப்பு

புதுடில்லி, ஆக. 23— "ஐந்தாவது திட்டக் காலத்தில் கூடுதலாக 2 கோடி கிலோவாட் மின்சாரம் உற்பத்தி செய்யாவிடில் நாட்டில் கடுமையான மின்சாரப் பற்றுக்குறை ஏற்படும்"

என்று, மக்களவையில் பாசன அமைச்சர் கே. எல். ராவ் எச்சரித்தார்.

நாட்டின் பல பகுதிகளில் ஏற்பட்டுள்ள மின்சார நெருக்கடி பற்றி நடந்த 4 மணிநேரத் தனி விவாதத்துக்கு அமைச்சர் பதிலளித்தார்.

ஐந்தாவது திட்டத்தில் 2 கோடி கிலோவாட் மின்சாரம் அதிகரிக்கும். தமது துறையின் யோசனையை திட்டக்குழு ஏற்றுள்ளதாக அவர் தெரிவித்தார்; அதைச் செய்யாவிடில் நாடு மோசமடையும்' என்றார்.

"இந்த இலக்கை அடைய மத்திய கட்டுப்பாட்டு நிறுவனம் இருக்கவேண்டும்; சம்பிரதாய முறைகள் அல்லாமல் முழுவதும் புதிய வழியை மேற்கொள்ள வேண்டும்" என்று அமைச்சர் கூறினர்.

காவல் துறையில் சீரமைப்பு

முதல்வர் தகவல்

சென்னை, ஆக 23— "காவல்துறையை மாற்றியமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை; எனினும், போலீஸ் கமிஷ்னரின் பரிந்துரைக் கேற்பச் சில சீரமைப்புகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன; அதன்படி, முதல் கிரேடு காவலர்கள் ஆயிரம்பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சி பெற்று வருகின்றனர்"

என்று சட்டப் பேரவையில், ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் முதலமைச்சர் தெரிவித்தார்.

"போலீசுக் கமிஷனரின் ஏனைய பரிந்துரைகள் ஆய்வில் உள்ளன"

என்று மற்றொரு கேள்விக்குப் பதிலளிக்கையில் முதலமைச்சர் தெரிவித்தார்.

வானொலியில் தமிழ்ச் செய்திகளுக்கு நேரக் குறைப்பு ஏன்?

மத்திய அரசின் கவனத்திற்குரிய சட்டப் பேரவை கேள்வி-பதில்கள்

முதலமைச்சர் கலைஞர் விளக்கம்

சென்னை ஆக. 23— வானொலியில் தமிழ்ச் செய்தி அறிக்கையின் நேரம் குறைக்கப்பட்டது குறித்தும், பிற்பகல் 2 மணிக்கு ஒலிபரப்பப்படும் தமிழ்ச் செய்தி அறிக்கை ரத்து செய்யப்பட்டது குறித்தும் மத்திய அரசுக்கு மாநில அரசு ஆலோசனை தெரிவித்துள்ளதா?'

என்று சட்டப் பேரவையில், என். கிட்டப்பா கேட்டதற்கு 'இல்லை' என்று பதிலளித்தார் முதலமைச்சர் கலைஞர்.

என். கிட்டப்பா:—"ஏற்கனவே தமிழ்ச் செய்திக்கு 15 நிமிடம் ஒதுக்கப்பட்டதே போதுமானதாக இல்லை என்று கருதப்பட்ட நிலை இருக்க, இப்போது அதிலும் 5 நிமிடத்தைக் குறைத்தது தமிழ் மக்களுக்கு டில்லி இழைத்த அநீதி ஆகாதா? இந்த அநீதியை நீக்க இந்த அரசு முயற்சி மேற்கொள்ளுமா?"

முதல்வர்:—"இந்த அநீதி தமிழ்நாட்டுக்கு மட்டும் இழைத்தது ஆகாது; எல்லா மாநிலத்துக்குமே அந்தந்த மாநில மொழிச் செய்தி அறிக்கையின் நேரத்தைக் குறைத்திருக்கிறார்கள்; சில முக்கியமான செய்திகளை ஆங்கிலத்திலும் — இந்தியிலும் 2 நிமிடம் வீதம் அவ்வப்போது ஒலிபரப்புவதற்காகப் பத்து நிமிடம் அந்தந்த மாநிலச் செய்திகளுக்கும் குறைத்திருக்கிறார்கள்; அதேபோல், தமிழ்ச்செய்திக்கு இருந்த நேரத்திலும் பத்து நிமிடம் குறைத்திருக்கிறார்கள்; பிற்பகல் தமிழ்ச் செய்தி ரத்து செய்யப்படவில்லை; 2 மணிக்கு ஒலிபரப்பான தமிழ்ச் செய்தி 12-45 மணிக்கு ஒலிபரப்பப்படுகிறது."

வீராசாமி:—"வேண்டாத பாடல்களுக்கெல்லாம் செலவிடும் நேரத்தைக் குறைத்துத் தமிழ்ச் செய்தியின் நேரத்தைக் கூட்ட ஆவன செய்யப்படுமா?"

முதல்வர்:—"இது நல்ல யோசனை; வானொலி நிலையத்தார் இந்த யோசனையைப் பரிசீலிப்பார்கள் என நம்புகிறேன்."

கேள்வி:—'மீண்டும் பழையபடியே தமிழ்ச் செய்திக்கு நேரம் ஒதுக்கும்படி இந்த அரசு மத்திய அரசைக் கேட்டுக்கொள்ளுமா?"

முதல்வர்:—"முக்கியச் செய்திகள் எப்போதுமே இருப்பதில்லை; எனவே, முக்கியச் செய்திக்கென உள்ள நேரத்தை எல்லா மாநில மொழிச் செய்திகளுக்கும் ஒதுக்கலாம்."

கந்தம்பன்:—"தமிழ்ச் செய்தி அறிக்கையிலும் 'ஸ்ரீ' என்றே சொல்லுகிறார்கள்; அதைத் 'திரு' என்று மாற்ற இந்த அரசு ஆவன செய்யுமா?"

முதல்வர்:—"முன்பு 'ஆகாஷ்வாணி' என்றிருந்ததை நாம் கேட்டுக் கொண்டதற்கிணங்க 'வானொலி' என்று மாற்றினார்கள்; அதன் பிறகு பிராந்தியச் செய்தியை 'மாநிலச் செய்தி' என்று மாற்ற ஒப்புக்கொண்டார்கள்; இப்போதும் இங்கு எழுப்பப்படும் கேள்விகளையடுத்து, வானொலி நிலையத்தார் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடும் என்று நம்புவோமாக!"

ஐ. சுப்பிரமணியம் (இந்திரா காங்கிரசு): — "சட்டமன்றக் கேள்வி மூலம் அவர்கள் உணர்ந்து நடவடிக்கை எடுப்பார்கள் என்று நம்புவதைவிட, முதலமைச்சரே ஒரு வேண்டுகோளை டில்லிக்கு இந்த அரசின் சார்பில் அனுப்பிவைப்பாரா?"

முதல்வர்:—"திரு. சுப்பிரமணியம் அவர்கள் சார்ந்துள்ள கட்சியின் ஆட்சி, 'நிலைமையை உணர்ந்து நடவடிக்கையெடுக்க வல்ல ஆட்சி' என்று நம்புகிறேன்; கோரிக்கை அனுப்பினுல்தான் கவனிக்கும் என்றால் அனுப்பத் தயார்."

கேள்வி:—"தேசியம் பாடல் என்ற பெயரில் இந்திப் பாடல்களையே ஒலிபரப்புகிறார்கள்; தேசியக்கவி பாரதியார் போன்றோரின் பாடல்களை ஒலிபரப்பும்படி வானொலி நிலையத்திற்கு இந்த அரசு எடுத்துரைக்குமா?"

முதல்வர்:—"மாநிலத்துக்கு ஏற்ற வகையில் நிகழ்ச்சிகளை வகுப்பதில் வானொலி நிலையத்தார் முனைப்பாக இருக்கவேண்டும் என்று நம்புகிறேன்."

என். கிட்டப்பா:—"சென்னை — திருச்சி வானொலி நிலையங்களின் ஒலிபரப்பும் சக்தியை அதிகப்படுத்துமாறு மத்திய அரசிடம் நமது அரசு வற்புறுத்தியுள்ளதா?"

பதில்:—"இல்லை."

என். கிட்டப்பா:—"கடல்கடந்த நாடுகளில் வாழும் தமிழ் மக்களுக்கும் கேட்கும் வகையில் தமிழக வானொலி நிலையங்களின் சக்தியை அதிகரிக்கும்படி இந்த அரசு கேட்டுக் கொள்ளுமா?"

முதல்வர்:—"சென்னையில் 20 கிலோவாட் மீடியம் வேவ் டிரான்ஸ்மீட்டரும், 10 கிலோவாட் ஷார்ட் வேவ் டிரான்ஸ்மீட்டரும் உள்ளன; திருச்சியில் 20 கிலோவாட் மீடியம் வேவ் டிரான்ஸ்மீட்டர் மட்டுமே உள்ளது; அது நூறு மைலுக்கு அப்பால் உள்ளவர்களுக்குக் கேட்க முடிவதில்லை; கல்கத்தா, பம்பாய் நகரங்களில் 80 கிலோவாட் மீடியம் டிரான்ஸ்மீட்டர் உள்ளது; அதைப்போல் சென்னையிலும் அமைக்க வேண்டு என்று இங்குள்ள வானொலி நிலையப் பொறியாளர்கள் எடுத்துச் சொல்லவில்லை; எனவே வானொலி நிலையப் பொறியாளர்கள் மூலம் இதனை அறிவிக்க ஏற்பாடு செய்யலாம்."

வீட்டு வாடகை கட்டுப்பாட்டுச் சட்டம்

மேலும் பத்தாண்டுக்காலம் நீடிக்கக் குழு பரிந்துரை

தமிழ்நாடு சட்டப் பேரவையில் மசோதா நிறைவேற்றம்

சென்னை, ஆக. 23— வீட்டு வாடகைக் கட்டுப்பாட்டு (குத்தகை)ச் சட்ட இரண்டாவது திருத்த மசோதாவை சட்டப் பேரவையில் குடியிருப்பு வசதித் துறை அமைச்சர் க. இராசாராம் தாக்கல் செய்தார்; விவாதத்திற்பின் இன்று அது நிறைவேறியது.

மசோதாவின் நோக்கங்கள் பற்றி விளக்கம்

விடுகன் இதர கட்டடங்களுக்கு நியாய வாடகை நிர்ணயிக்க இம்மசோதா வழி செய்கிறது; குடியிருப்பு வீடுகளாக இருந்தால் அவற்றின் ஆண்டு வருமானத்தில் 9 சதவிகிதமும், குடியிருப்பு வீடு இருப்பு அல்லாத இதர இடங்களாக இருந்தால் (கடைகள், அலுவலகக் கட்டடங்கள் போன்றவை) ஆண்டு வருமானத்தில் 12 சதவிகிதமும் நியாய வாடகையாக நிர்ணயிக்கலாம்—என்பது மசோதாவின் நோக்கமாகும்.

வீட்டு வாடகைக் கட்டுப்பாட்டு (குத்தகை)ச் சட்டத்தை மதுரைக்கும் விரிவுபடுத்தும் வகையில் ஒரு பிரிவு இந்தத் திருத்தச் சட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது; அத்துடன், எந்த நகராட்சிப் பகுதிக்கும் இச்சட்டத்தை அரசு குறிப்பிடும் தேதியிலிருந்து ஓர் உத்தரவின் மூலம் விரிவுபடுத்த வகைசெய்யப்பட்டிருக்கிறது.

வீட்டுச் சொந்தக்காரரோ அல்லது அவரது குடும்பத்தினரோ தங்களுடைய சொந்தப் பயனுக்கு அந்த வீடு வேண்டும் என்று அத்தாட்சி பெற்ற அதிகாரிக்கு மனுச் செய்துகொண்டால் அந்தக் கட்டடத்தை வீட்டு வாடகைக் கட்டுப்பாட்டு அதிகாரியின் பிடிப்பிலிருந்து விடுவிக்க வகைசெய்யும் பிரிவு ஒன்றும் மூலச் சட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது; அதே நேரத்தில், பாதிக்கப்படுகின்றவர்கள் அரசுக்கு மேல் முறையீடு செய்துகொள்ளும் உரிமையும் தரப்பட்டிருக்கிறது.

வீட்டு வாடகைக் கட்டுப்பாடு அதிகாரியின் பிடிப்பிலிருந்து இந்த வீட்டைத் தங்கள் சொந்தப் பயனுக்காக விடுவிக்க வேண்டும் என்று கோருகின்ற மேற்படி வீட்டுச் சொந்தக்காரர்களுக்கு வேறு வீடு இருக்கக்கூடாது.

வீட்டுச் சொந்தக்காரரோ அல்லது குடித்தனக்காரரோ மனுச் செய்துகொண்டால் அதை மறுபரிசீலனை செய்து நியாய வாடகை நிர்ணயிக்கவும் மசோதா வழிசெய்வதுடன், 1971-ம் ஆண்டு மார்ச் 31-ந் தேதிக்குப் பிறகு கட்டப்பட்ட கட்டடங்களுக்கு இச் சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளிக்கவும் ஒரு தனிப் பிரிவு சேர்க்கப்பட்டுள்ளது.

வீட்டு வாடகை (குத்தகை) கட்டுப்பாட்டுச் சட்டம் 1960-ம் ஆண்டு கொண்டுவரப்பட்டு அவ்வப்போது இச்சட்டத்தின் ஆயுட்காலம் நீடிக்கப்பட்டு வந்துள்ளது; செப்டம்பர் மாதம் 30-ம் தேதியோடு காலாவதியாக இருந்த இச்சட்டத்தின் ஆயுட்காலம் மேலும் 9 மாத காலத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளது.

1969-ம் ஆண்டில் அரசு நியமித்த ஒரு குழு, வீட்டு வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டம் — விதிகளை ஆராய்ந்து அதுகுறித்து அறிக்கை கொடுக்கும்படி கோரப்பட்டிருந்தது; அந்தக் குழுவிற்கு அரசாங்க செயலாளர் எச்.கே. காஜி தலைவராக இருந்தார்.

இந்த 6 உறுப்பினர்கொண்ட குழு பரிசீலித்து கொடுத்த 77 பக்க அறிக்கையில் கூறப்பட்டிருந்த சிபாரிசுகள் பெரும்பாலானவற்றை ஏற்று இம்மசோதா கொண்டுவரப்பட்டுள்ளது" என்று அமைச்சர் இராசாராம் தெரிவித்தார்.

நகரங்களில் இப்போதைக்கு வீட்டு வசதிப் பிரச்னை சீரடையாததாகையால், வீட்டு வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஆயுட்காலம் மேலும் 10 ஆண்டுக் காலத்துக்கு — அதாவது 1980-ம் ஆண்டு செப்டம்பர்வரை நீடிக்கப்பட வேண்டுமென்று இக்குழு சிபாரிசு செய்துள்ளது.

மத்திய அரசிடம் மாநிலங்கள் பட்டுள்ள கடன்

புதுடில்லி, ஆக. 23 "கோரத்த கடனுக்காக மாநில அரசுகளிடமிருந்து வசூலிக்கும் வட்டியின் விகிதத்தைக் குறைக்க முடியாது"

என்று மத்திய நிதியமைச்சர் ஒய். பி. சவான் மறுத்துவிட்டார்.

நிதித் துறையின் எம். பி.-க்கள் ஆலோசனைக் குழுக் கூட்டம் நேற்று நடந்தது.

கூட்டத்தில் கலந்துகொண்ட எம்.பி.க்களில் பலர், 'மாநில அரசுகளுக்குக் கொடுக்கும் கடன் மீதான வட்டி விகிதத்தைக் வேண்டும்; ஒரு சதவீதம்தான் வட்டி வாங்க வேண்டும் என்று வற்புறுத்தினர்.

அத்துடன், 'மாநிலங்களின் கடன் சுமையைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றும் அவர்கள் கேட்டுக்கொண்டார்கள்.

வட்டி விகிதத்தைக் குறைக்க மறுத்துவிட்ட நிதியமைச்சர் கூறியதாவது:—

"பொதுமக்களிடமிருந்து வாங்கும் கடனுக்கு மத்திய சர்க்காரே 5 சதவீதம் வட்டி கொடுக்கிறது; அப்படியிருக்க மாநில அரசுகளிடம் வசூலிக்கும் வட்டி விகிதத்தைக் குறைத்தால் மத்திய சர்க்காருக்கு பெரும் நட்டம் ஏற்படும்.

இந்த ஆண்டு மார்ச் மாதம் முடிய மத்திய அரசுக்கு மாநில அரசுகள் கொடுக்கவேண்டிய கடன் தொகை ரூ. 6,780 கோடி.

கடன் சுமையைக் குறைப்பது பற்றிய பிரச்சினையை 6-வது நிதிக் குழுவுக்கு அனுப்பி — அதன் சிபாரிசுகளைக் கேட்டிருக்கிறோம்."

கடல் அரிப்பு — தடுக்க நடவடிக்கை

விமானம்மூலம் தமிழ்நாடு முழுவதும் ஆய்வு

சட்டப் பேரவையில் அமைச்சர் சாதிக்பாட்சா தகவல்

சென்னை, ஆக. 22— தமிழ்நாட்டில் கரையோரங்களில் கடல் அரிப்பைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது; இதற்காக விமானம் மூலம் 'சர்வே' நடத்தப்படும்.

தமிழ்நாடு சட்டப் பேரவையில், இது பற்றிய கவன ஈர்ப்புத் தீர்மானம் ஒன்றை டென்னிஸ் கொண்டு வந்தார்.

"கன்னியாகுமரி மாவட்டத்தில் கடல் அரிப்பால் பல சிறு கிராமங்கள் பாதிக்கப்பட்டு இருப்பது என்பதை அரசின் கவனத்துக்கு கொண்டு வருகிறேன்" என்று தீர்மானத்தில் கூறப்பட்டிருந்தது.

இதற்கு பதில் அளித்தும் பொதுப்பணித்துறை அமைச்சர் எஸ்.ஜே. சாதிக்பாட்சா, அறிக்கை ஒன்றை அவையில் தாக்கல் செய்தார்; அதில் கூறியிருப்பதாவது:—

"கன்னியாகுமரி மாவட்டத்தில் கடற்கரையில் அரபிக்கடல் பகுதியில், கரை நெடுகச் சுவர் எழுப்பும் யோசனைக்கு அரசு இறுதி வடிவம் கொடுத்து வருகிறது.

தமிழ்நாடு முழுவதிலும், கடல் அரிப்பைத் தடுப்பதற்கு என்னென்ன வழி முறைகளைக் கையாளலாம் என்பதைப் பற்றி ஆராய பூண்டி நில நீர் ஆராய்ச்சிக் கூடத்தில் ஓர் உட்பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது; அந்த ஆராய்ச்சித் துறையினருக்கு வேண்டிய புள்ளி விவரங்களைத் தயாரிப்பதற்காகவும், ஆராய்ச்சியை விரைவாகச்செய்து முடிப்பதற்காகவும், தமிழ்நாடு கடற்கரை முழுவதையும், விமானம் மூலம் ஆராய்ச்சிசெய்யும் யோசனையையும் அரசு பரிசீலித்து வருகிறது"

அலவன்சு

என்ற பெயரால் ரூ. 10.70 கோடி

முன்னாள் மன்னர்கட்கு ஒதுக்கப்படுகிறது

புதுடில்லி, ஆக. 21— 1972-73-ம் ஆண்டுக்காக மொத்தம் ரூ 47.32 கோடிக்கான துணை மானியக் கோரிக்கைகள் மக்களவையில் அளிக்கப்பட்டது.

முன்னாள் மன்னர்களுக்கு இடைக்கால அலவன்ஸ் கொடுப்பதற்காக ரூ 10.70 கோடி இதில சேர்க்கப்பட்டுள்ளன.

"மன்னர்களின் மானியம் ரத்து செய்யப்பட்டதைத் தொடர்ந்து இடைக்கால அலவன்சுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது" என்று நிதித்துறைத் துணை அமைச்சர் கே. ஆர். கணேஷ் கூறினர்; இவற்றுக்கு வருமானவரி கிடையாது.

மன்னர் மானியத்தைக்கொண்டு காப்பாற்றப்பட்டுவந்த முன்னாள் மன்னர்களின் குடும்பங்களைச் சேர்ந்த நெருங்கின உறவினர்களுக்கான செலவைச் சமாளிப்பதற்காக ரூ 5 இலட்சம் துணைமானியக் கோரிக்கையில் ஒதுக்கப்பட்டுள்ளது

"மன்னர் மானியத்தை நிறுத்தியதானது இத்தகைய குடும்பங்களைப் பாதிக்குமாகையால் பனிதாபிமான காரணங்களையொட்டி இந்த ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது" என்று அமைச்சர் கூறினர்.

கோவில் நிலங்களை ஏப்பமிட்ட 'பெரிய மனிதர்'கள்

தனி அதிகாரி மூலம் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் கண்டுபிடிப்பு

சட்டப் பேரவையில் அமைச்சர் கண்ணப்பன் தகவல்

சென்னை, ஆக. 23— "நிலவுடைமைக்கு உச்சவரம்பு கொண்டு வரப்பட்டதுபோல் கோவில்கள்—மடங்கள் வைத்துக் கொண்டிருக்கின்ற நிலங்களுக்கும் — சொத்துக்களுக்கும் உச்சவரம்புச் சட்டம் கொண்டு வரும் எண்ணம் உண்டா?"

என்று சட்டப் பேரவையில் ஆர். ஆர். முனுசாமி வினவினர்.

அமைச்சர் மு. கண்ணப்பன்:— "அப்படிப்பட்ட எண்ணம் இப்போதைக்கு இல்லை."

"உபரி வருமானமுள்ள கோவில்களின் நிதியிலிருந்து வருமானமில்லாத கோவில்களைப் பழுது பார்த்தல்-புதுப்பித்தல் போன்ற காரியங்களுக்குப் பணம் செலவிடப்படுகிறது"

என்று துணைக் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் தெரிவித்தார்.

சுரேந்திரன் (புது காங்கிரசு):— "எண்ணற்ற கோவில்கள் தமிழகத்தில் இருந்தும், அவை அனைத்துக்குப் பக்தர்கள் செல்வதில்லையே; எனவே, பக்தர்களைக் கவரும் ஆலயங்கள் எவை —சக்தியுள்ள தெய்வங்கள்எவை என்பதைத் தொகுத்துப் பட்டியலாக அரசு வெளியிடுமா?"

அமைச்சர்:—"'ஒன்றே குலம்— ஒருவனே தேவன்' என்ற கொள்கையைக் கொண்டது இந்த அரசு."

மேலும் அமைச்சர் தெரிவித்ததாவது:—

"ஆலயங்களின் உபரி நிதியிலிருந்து கல்வி நிலையங்கள்— மருத்துவச்சாலைகள்— அனாதை விடுதிகள் போன்ற தர்ம காரியங்கள் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

கோவில்களுக்குச் சொந்தமான சொத்துக்களை வேறு எவரெவரோ அனுபவிப்பதைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்க நியமிக்கப்பட்ட தனி அதிகாரி ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இவ்வாறு அனுபவிக்கப்படுவதைக் கண்டுபிடித்துள்ளார்."

காற்றில் கலக்கும் புகை

தடுப்பது பற்றி அரசு பரிசீலனை

சென்னை, ஆக. 23— "சென்னை நகரில் பேசின்பிரிட்ஜ் பகுதியில் காற்றில் புகை கலந்து இருப்பதால், அவ்வாறு புகை போன்றவை கலக்காமல் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?"

என்று மேலவையில் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் க. அன்பழகன் கூறியதாவது:—

"சென்னை நகரில் காற்றில் புகை போன்றவை கலப்பதைத் தடுப்பதைப் பற்றிய வழிவகைகளை ஆராய்ந்த நிபுணர் குழு, அறிக்கையை அரசிடம் கொடுத்துவிட்டது; அந்த அறிக்கையில், 'பேசின்பிரிட்ஜ் பகுதியில் உள்ள இரயில் எஞ்சின்கள் புகை — மின்சார உற்பத்தி நிலையத்தின் புகை — இவைகள் பற்றியும் குறிப்பிட்டு சிபாரிசு செய்திருக்கிறது; அவை அரசின் பரிசீலனையில் உள்ளன.'"

காவிரி நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினை

'ஆறு மாதங்களில் தீரும்' என நம்பிக்கை

புதுடில்லி, ஆக. 23— காவிரி நீர்த் தகராறுக்கு 6 மாதங்களுக்குள் தீர்வு ஏற்படும்; அதன்மூலம் தமிழ்நாட்டுக்கும் — மைசூருக்கும் இடையே உடன்பாடு நல்ல முறையில் புதுப்பிக்கப்பட வகை செய்யப்படும் என்று தெரிகிறது.

தற்போது இரு மாநிலங்களும் காவிரியில் கிடைக்கும் தண்ணீர் அளவு — மாநிலங்களின் பாசன உரிமைகள் — காவிரித் தண்ணீரைப் பயன்படுத்த வகுக்கப்பட்ட திட்டங்கள் ஆகியவை சம்பந்தமாகப் புள்ளிவிவரங்களைத் திரட்டி வருகின்றன; இந்நடவடிக்கைகள் 6 மாத காலத்திற்குள் முடிவு செய்யப்பட்டுவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது; அதன் பின்னர், இரு மாநில அரசுப் பிரதிநிதிகளும் சந்தித்து உடன்பாட்டை இறுதியாக்குவர்.

காவிரி தகராறுக்குத் தீர்வு ஏற்பட்டுவிட்டால், அது தென்னக ஆற்று நீர் கிரிட் இறுதி உருப்பெறுவதற்கு உதவும்.

கங்கை - காவிரி இணைப்பு

கங்கை — காவிரி இணைப்புப் பற்றி மத்திய பாசன அமைச்சர் டாக்டர் ராவ் பேசிவருகிறார்; இதற்கு இரு காரியங்களைச் செய்தாக வேண்டும்; முதலில் கங்கையை நர்மதையுடன் இணைக்க வேண்டும்; அதிலிருந்து தெற்கே செல்லும் மற்றொரு கால்வாயுடன் இணைக்க வேண்டும்.

கங்கை—கால்வாய் இணைப்புப் பற்றி நர்மதா பள்ளத்தாக்கு மேம்பாட்டுத் துறை பரிசீலிக்கும்.

இதன் தென்கோடி இணைப்பு கோதாவரி—காவிரி இணைப்பாக இருக்கும்; இந்த இணைப்புக்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்விரு நதிகளையும் இணைப்பதற்காகத் தமிழ்நாடு — ஆந்திர அரசுகளுக்குத் தேவைப்படும் தொழில் நுட்ப - இதர உதவி அனைத்தையும் மத்திய அரசு அளிக்கும் என்று தெரிகிறது.

நதித் தண்ணீர் அனைத்தும் தேசியச் சொத்து — என்ற கோட்பாடு இனி மேலோங்கி நிற்கும்.

கலப்படத்தைத் தடுக்க நடவடிக்கை

சமுதாயமும்-மக்கள் மனச்சாட்சியும் திருந்துவது அவசியம்

அமைச்சர் க. அன்பழகன் விளக்கமும் — வலியுறுத்தலும்

சென்னை, ஆக. 23— ஓட்டல்களில் உணவுப் பண்டங்களில் கலப்படம் செய்யப்படுவதைத் தடுக்க எடுக்கப்படும் நடவடிக்கைகள் பற்றிச் சட்டப் பேரவையில் உறுப்பினர்கள் கேட்ட கேள்விகளும் — அமைச்சர் க. அன்பழகன் சொன்ன பதில்களும் வருமாறு:—

குமாரசாமி (இ காங்.):—"ஓட்டல்களில் சுகாதார சூழ்நிலையும் இல்லை; பண்டங்களும் தரக் குறைவாய் இருக்கின்றன; பெரிய ஓட்டல்களில்கூட, ஈ மொய்க்கிறது; ஆகவே, இது பற்றி அதிகாரிகள் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உத்தரவு போடப்படுமா?"

அமைச்சர்:—"1954-ம் ஆண்டு சட்டப்படி கலப்படத்தைத் தடுத்து நடவடிக்கை எடுக்க மாநகராட்சிகளில் சுகாதார இன்ஸ்பெக்டர்கள் இருக்கிறார்கள்; அவர்கள் நடவடிக்கை எடுக்கிறார்கள்; சுகாதாரத் துறைச் செயலாளர் — இயக்குநர் — மாநகராட்சி கமிஷனர் ஆகியோர் கூடிப் பேசிக் கடும் நடவடிக்கை எடுக்க உத்தரவு போட்டிருக்கிறார்கள்.

"இப்படிப்பட்ட பிரச்சினைகளை அதிகாரிகள் மட்டும் நிவர்த்தி செய்துவிட முடியாது; ஆங்காங்கே, 'பயன்படுத்தும் பொதுமக்கள் சங்கம்' என்று ஏற்படுத்தி — அதன்மூலம் பொதுமக்களுக்குப் பிரச்சாரம் செய்தால் குறைகள் பெரும் அளவு நீங்கும்."

சோணையா (தி. மு. க.):—"சட்டமன்ற உறுப்பினர்கள் புது விடுதிக்குக் கீழேயுள்ள ஓட்டலில் சுகாதாரம் எல்லோருக்கும் தெரியும்; தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?"

அமைச்சர்:—"எங்கு இருந்தாலும், சுகாதாரக் கேடு சுகாதாரக் கேடுதான்; உறுப்பினர், 'விடுதிக் குழு'விடம் இது பற்றித் தெரிவித்தால் ஆவன செய்யப்படும்."

சௌந்திர பாண்டியன் (தி.மு.க.):— "கிராமங்களில் அனுமதி இல்லாமலேயே ஓட்டல்களைத் திறந்துவிடுகிறார்களே — அரசுக்குத் தெரியுமா?"

அமைச்சர்:— "அதற்குக்கூடப் பொதுமக்களின் பிரதிநிதிகள் சிபாரிசுக்கு வந்துவிடுகிறார்கள்; வராமல் இருந்தால் நல்லது."

பொன்னப்ப நாடார் (ஸ.காங்):— "பயன்படுத்துவோர் சங்கம் எல்லா இடங்களிலும் இருக்கிறதா?"

அமைச்சர்:—"ஓரிரு இடங்களில் இருக்கிறது; சில நகரங்களில் முக்கியத்துவம் பெற்றிருக்கிறது."

வெங்கடசாமி (சுதந்தரா):— "மற்ற மாநில அமைச்சர்கள் ஓட்டல் சுகாதாரத்தை அறிவதற்காக நேரடியாகப் போகிறார்கள்; நமது அமைச்சரும் போய்ப் பார்த்தாரா?"

அமைச்சர்:— "சுகாதாரத்தைப் பார்ப்பதற்காக, நான் எங்கும் போவதில்லை; அத்துடன், அமைச்சர் வருகிறார் என்று தெரிந்தால், ஓட்டல்களை நல்ல நிலையில் வைத்திருப்பார்கள்; ஆகவே, பொதுமக்கள் மனப்பான்மையும் — கடமையுணர்ச்சியும் இதில் உதவ வேண்டும்."

கே.எம். சுப்பிரமணியம் (ப.காங்):— "சென்னையில் வெண்ணெயில் கூட கலப்படம் செய்கிறார்களே?"

அமைச்சர்:—"இந்தத் தகவலை மாநகராட்சிக் கமிஷனருக்கு அனுப்புகிறோம்."

கா. வேழவேந்தன் (தி.மு.க.):— "ஓட்டல் தொழிலாளர்களுக்குத் தங்குவதற்குச் சரியான விடுதி இல்லாததால்தான் ஓட்டலின் உட்புறம் சுகாதாரம் இல்லாமல் இருக்கிறது; ஆகவே, 'ஓட்டல் தொழிலாளிகளுக்கு சோங்தாற்போல் விடுதி வைத்து இருந்தால் தான் ஓட்டலுக்கு அனுமதி கொடுக்கப்படும்' என்று நிபந்தனை விதிக்கப்படுமா?"

அமைச்சர்:— "பரிசீலனைக்குரிய யோசனை."

பரந்தாமன் (தி. மு. க.):— "கலப்படம் நடப்பது பொருள்கள் பற்றுக்குறை காரணமாகத்தான் நடப்பது என்பது தெரியுமா?"

அமைச்சர்:— "அது சரியான வாதம் அல்ல; இலாப நோக்கம் தான்— விரைவில் பணம் சேர்க்க வேண்டும் என்ற எண்ணமே காரணமாகும்."

வகாப் (லீக்):— "கலப்படத்தைக் கண்ணுக்குப் புலப்படாத வகையில் செய்கிறார்கள்; கோழிக் கறிக்குப் பதில் காக்காய் கறியை வைத்துவிடுகிறார்கள்; அதை அரசு உணருமா?"

அமைச்சர்:—"மனிதத் தன்மை இல்லாத காரணத்தால்தான் இவ்வாறு செய்கிறார்கள்; மநகராட்சி சுகாதார இன்ஸ்பெக்டர்களுக்கு அறிவித்துத் தக்க நடவடிக்கை எடுக்கச் சொல்லலாம்; பொதுவாகச் சமுதாயமும் மனச்சாட்சியும் திருந்த வேண்டும்."

தமிழகத்தில் சூரியகாந்திப் பயிர்

ரூ. 48,000 செலவில் செய்முறை திட்டம்

சென்னை, ஆக. 23— சூரியகாந்தி விதையிலிருந்து எண்ணெய் உற்பத்தி செய்வது பற்றி சட்டமன்ற மேலவையில் கேட்கப்பட்ட கேள்விகளும் — வேளாண்மை அமைச்சர் மன்னை ப. நாராயணசாமி அவர்கள் அளித்த பதில்களும் வருமாறு:—

சாமிநாதன் (சுதந்தரா) —"சூரியகாந்தி செடியைப் பயிரிடுவதை வியாபார நோக்கத்தோடு செய்ய அரசு அக்கறை கொண்டிருக்கிறதா?"

அமைச்சர்:—"தமிழ் நாட்டில் மத்திய அரசு ஆதரவுடன் 1971—72-ம் ஆண்டில் சூரியகாந்தி செய்முறை விளக்கத் திட்டத்தின்படி ரூ. 48,000 செலவில் 160 ஹெக்டேர் பரப்பில் பயிரிடப்பட்டது; இதை வியாபார ரீதியில் மேம்பாடு செய்ய வாய்ப்பு இருக்கிறதா என்பதைக் கண்டறிவதற்காக மாநிலம் முழுவதும் சூரியகாந்தி செயல் விளக்கப் பண்ணைகள் அமைக்கப்பட்டன; நீர் பாய்ச்சாமல் முன் பருவப் பயிர் காலத்தில் இந்தப் பண்ணைகளில் விதைகள் விதைக்கப்பட்டன; நீர் பாய்ச்சிப் பயிரிடுவதை ஆராயவும் பின் பருவ காலத்திலும் விதைக்கப்பட்டன.

"ஆரம்பச் சோதனையிலிருந்து நமது மாநிலத்தில் நீர் பாய்ச்சாத நிலையில்கூட சூரியகாந்தியைப் பயிரிட முடியும் என்று அறியப்பட்டது; என்றாலும், நல்ல பரிசோதனைக்குப் பிறகே இதை வியாபார ரீதியில் பயிரிட முடியுமா என்பதை முடிவு செய்ய இயலும்."

இராஜா அய்யர்:—"அதன் எண்ணெய் வியாபார ரீதியில் எடுக்க முடியுமா?"

அமைச்சர்:—"விதையிலிருந்து எண்ணெய் எடுக்கிறார்கள்; சர்க்கரை வியாதிக்காரர்கள் — கொழுப்புச் சத்துள்ள உணவைச் சேர்க்கக் கூடாதவர்கள் — இந்த எண்ணெயைப் பயன்படுத்தலாம்."

அமைச்சர் அன்பழகன் (குறுக்கிட்டு):—"எண்ணெயை மட்டும் அல்ல — அதன் விதை கூடத் தித்திப்பாக இருப்பதால், தின்பண்டங்களோடு சேர்த்துத் தயாரிக்கலாம்; உடலுக்கும் நல்லது; குழந்தைகளுக்கும் பயன்படும்; 'சபோலா' என்று வட நாட்டிலிருந்து வரும் எண்ணெயும் இதுவேதான்."

தொழிலாளர் நல நிதி

சட்டம் நிறைவேறியது

சென்னை, ஆக. 23— தொழிலாளர் நலத்துறை அமைச்சர் என். வி. நடராசன் கொண்டுவந்த தொழிலாளர் நல நிதி மசோதா சட்டப் பேரவையில் நிறைவேறியது.

இந்த மசோதாவின் இரண்டாவது வாசிப்பின்போது ஸ்தாபன காங்கிரசு உறுப்பினர் ஜேஸ் ஒரு திருத்தம் கொண்டுவந்தார்; 'இந்த நிதிக்குத் தொழிலாளர் பங்குத் தொகை கொடுக்கவேண்டும்' என்ற பிரிவு நீக்கப்படவேண்டும் — என்று அத்திருத்தத்தில் கூறப்பட்டிருந்தது.

விவாதத்திற்குப் பதிலளித்த அமைச்சர் என். வி. நடராசன் கூறியதாவது:—

"தொழிலாளர் நல நிதி என்று இருப்பதால், தொழிலாளர் பங்கும் இருக்கவேண்டும் என்றேஇவ் வாறு விதி செய்யப்பட்டது; இது செயல்படுத்தப்பட்ட பிறகு தொழிலாளர் பங்குத்தொகை வேண்டாம் என்று கருதினால் அதுபற்றிப் பரிசீலிக்கப்படும்."

சிம்சன் நிறுவனம் திறப்பு

திருப்திகரமான தீர்வுக்கு வழிவகுத்த தமிழக அரசுக்குப் பாராட்டு

மத்திய அமைச்சர் ஆர்.கே.காடில்கர் பெருமிதம்

புதுடில்லி, ஆக, 24-

சென்னை சிம்சன் கம்பெனி கூட்டு நிறுவனங்கள் மீண்டும் திறக்கப்பட்டு உற்பத்தி துவங்கியிருப்பதற்காக மத்திய தொழிலாளர் நல அமைச்சர் ஆர், கே. காடில்கர் மகிழ்ச்சி தெரிவித்தார்.

இப்படி ஒரு சுமூகமான சூழ்நிலை ஏற்படச் செய்ததற்காகத் தமிழக அரசையும்--நிர்வாகத்தையும்--ஊழியர்களையும் அமைச்சர் பாராட்டினர்.

பாராட்டு அறிக்கை

சிம்சன் கூட்டுத் தொழில் நிறுவனங்கள் திறக்கப்பட்டதற்கு மகிழ்ச்சியும் நன்றியும் தெரிவித்து மத்திய தொழிலாளர் நலத் துறை அமைச்சர் ஆர். கே. காடில்கர் புதுடில்லியில் அறிக்கை ஒன்று வெளியிட்டுள்ளார்; அதில் அவர் கூறியிருப்பதாவது:—

"சிம்சன் கூட்டுத் தொழில் நிறுவனங்கள் இயங்காமல் இருந்ததால் தமிழகத்தின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டது மட்டுமல்லாமல், இந்தியாவின் பாதுகாப்புத் துறைத் தொழில்களிலும் -- மோட்டார் வாகனத் தொழில்களிலும் இதனால் உற்பத்தி மோசமான அளவுக்குப் பின்னடைந்தது; எனவே, இத்தொழில் நிறுவனங்கள் மீண்டும் திறக்கப்படுகின்றன என்ற செய்தி மனதுக்கு இதமளிக்கும் ஒன்றாகும்.

மாநில அரசு இதற்காக எடுத்துக்கொண்ட நன்முயற்சிகளுக்கு நன்றி.

இந்தத் திருப்திகரமான தீர்வுக்கு வழிவகுத்து ஒத்துழைத்த அனைவரையும் -- மாநில அரசினர் -- சிம்சன் கூட்டுத் தொழில் நிறுவனங்களின் நிர்வாகத்தினர் -- தொழிலாளர் அனைவரையும் பாராட்டுகிறேன்.

இந்த ஒத்துழைப்பின் மூலம், அமைதியும் -- சுமூகமான சூழ்நிலையும் -- தங்குதடையில்லா உற்பத்தியும் ஏற்படும் என்பதும், இழந்துவிட்ட உற்பத்தியை ஈடுசெய்தாக வேண்டும் என்பதும் முக்கியம்.

அத்துடன்; பொருளாதார அறைகூவலையும் -- அதன் தேவைகளையும் சந்தித்தாக வேண்டியிருக்கிறது.

தொழிலாளர்கள் இந்த அறைகூவலை நம்பிக்கையோடு ஏற்று நிறைவேற்ற வேண்டும்.

தொழிலாளர்கள் தங்களுடைய முழுமனதான ஒத்துழைப்பை நல்கிட வேண்டுமென்றும் அவர்களை நான் வேண்டிக் கொள்கிறேன்.

கடுமையான குற்றச்சாட்டுகள் சாட்டப்பட்டு விசாரணை நடைபெற வேண்டியிருக்கும் சில தொழிலாளர்கள் இப்போதைக்குத் திரும்ப எடுத்துக்கொள்ளப்படமாட்டார்கள் என அறிகிறேன்; ஆயினும் இந்த விசாரணை துரிதமாக நடத்தப்படுமென்றும், அதுவரையில் அவர்களுக்கு வாழ்க்கைச் செலவுக்கான பணம் வழங்கப்பட்டு வரும் என்றும் எனக்கு சிம்சன் நிர்வாகத்தினர் மூலம் உறுதி அளிக்கப்பட்டுள்ளது.

சிம்சன் கூட்டுத் தொழில் நிறுவனங்கள் திறக்கப்படுவதற்குக் காரணமாக இருந்த அனைவரது நல்லெண்ணங்களும் மீண்டும் தொழிற்சாலைகள் சுமூகமாக இயங்கி வரவும் துணையாக இருக்கும் என்றும் நம்புகிறேன்."

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அறிவகம் அச்சகத்தில் (...) வெளியிடப்படுகிறது.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டம்

25--8--72

வேலூர் (சேலம்)

நகர 11-வது வட்ட எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் மாலை 7-மணிக்கு வ. உ. சி. திடலில்; தலைவர்: ப. இராதாகிருட்டிணன்; பேசுவோர்: சி. வே. வேலப்பன் எம்.எல்.ஏ., டாக்டர் கு. ஆறுமுகம், ஏ. இராசு, ம. மூஸ்தாபா, வி. ஏ. இலக்குமணன், மு. சீனிவாசன், வை. பெருமாள், டி. கே. இராசு, க. சீனிவாசன், அ. இரசாக், மற்றும் பலர். (இரவு 8 மணிக்கு முகவை மணி-சாமி குழுவினரின் 'ஏழையின் சிரிப்பிலே எங்கள் ஆட்சி' எனும் கலை நிகழ்ச்சி நடைபெறும்).

கைத்தறி செநவு தொழில்

சிக்கல்கள் குறித்து ஆய்வு செய்ய மூவர் குழு -- தமிழக அரசு முடிவு

இரு மாதங்களுக்குள் அறிக்கை தர வேண்டுமெனக் கோரிக்கை

சென்னை, ஆக. 24 -

"கைத்தறித் தொழிலுக்கான எல்லாப் பிரச்சினைகளும் தீர்க்கப்பட்டு விட்டதாகவோ, இத்துறையில் அவர்களுக்குச் செய்யவேண்டிய உதவி மிகச் சொற்பமே என்றோ அரசு நினைக்கவில்லை.

"போதிய நிதியுதவி கிடைத்தல் -- நியாயமான விலையில் நூல் வழங்குதல் -- துணிகளின் விற்பனை ஆகியவை தொடர்பாக கைத்தறித் தொழிலில் ஏராளமான சிக்கல்களை அரசு அறியும்.

"இந்தச் சிக்கல்கள் பற்றி விரிவாக ஆய்வு செய்து, கைத்தறி தொழில் நல்ல வளர்ச்சி ஏற்படுவதற்கு எடுக்கப்படவேண்டிய பொருத்தமான நடவடிக்கைகள் பற்றிக் கருத்து தெரிவிப்பதற்காக திரு. கே. சந்தானம் அவர்களைத் தலைவராகக் கொண்டும், தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கியின் தலைவராகிய திரு. ஆர். கனகசபை அவர்களையும், சென்னிமலை நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராகிய திரு. எம்.பி. நாச்சிமுத்து அவர்களையும் கொண்ட வல்லுநர் குழு ஒன்றை அமைக்க அரசு முடிவு செய்துள்ளது.

'தனது அறிக்கையை அது இரண்டு மாதத்துக்குள் அனுப்புமாறு இக்குழு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது, குழு தனது அறிக்கையை அளித்தவுடன், அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு எடுக்கும்."

என்று, சட்டப் பேரவையில் தொழில் அமைச்சர் செ. மாதவன் அவர்கள் அறிவித்தார்.

மாமல்லபுரத்தில் சுற்றுலா விடுதி

100 அறைகளுடன் நவீன முறையில் அமையும்

சுற்றுலா வாரியத் தலைவர் ஏ.வி.பி. ஆசைத்தம்பி தகவல்

சென்னை, ஆக. 23—

செங்கற்பட்டு மாவட்டத்தில் சுற்றுலா வளர்ச்சித் திட்டத்தை எங்கெங்கு மேற்கொள்ளலாம் என்பது பற்றி ஆராய சைதாப்பேட்டை பனகல் கட்டிடத்தில் கூட்டம் நடந்தது.

கூட்டத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் ஏ.வி.பி. ஆசைத்தம்பி பேசியதாவது:—

"மாமல்லபுரத்துக்குச் சுற்றுலா வரும் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது; வெளிநாட்டுப் பயணிகள் மாமல்லபுரச் சிற்பங்களை ஆவலுடன் பார்க்க வருகிறார்கள்; எனவே, அங்கு அவர்களுக்குச் சிறந்த வசதிகள் செய்து கொடுக்க வேண்டியிருக்கிறது.

முதற்கட்டமாக, மாமல்லபுரத்தில் 100 அறைகளைக் கொண்ட நவீன ஓட்டலைக் கட்ட சுற்றுலா வளர்ச்சிக் கழகம் முடிவு செய்திருக்கிறது; இதற்காக 37 ஏக்கர் நிலம் வாங்கப்படும்."

மாவட்ட ஆட்சித் தலைவர் என். கிருஷ்ணமூர்த்தி அனைவரையும் வரவேற்றார்.

செங்கற்பட்டு மாவட்ட சட்டமன்ற உறுப்பினர்களும் -- ஊராட்சி ஒன்றியத் தலைவர்களும், அதிகாரிகளும் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் பேசிய கே. டி. எஸ். மணி (காஞ்சிபுரம் நகராட்சித் தலைவர்), 'காஞ்சிபுரத்திற்கு பக்தர்களின் வருகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது; எனவே, பக்தர்கள் தங்குவதற்காகச் சுற்றுலா மாளிகை அமைக்கப்பட வேண்டும்' என்று வற்புறுத்தினர்.

சட்டமன்ற உறுப்பினர்கள் வேழவேந்தன், வை. பாலசுந்தரம், செ. வே. விசுவநாதன், நாகலிங்கம், மா. வெ. நாராயணசாமி ஆகியோரும், குன்றத்தூர் -- திருப்போரூர் -- மாதவரம் -- பூண்டி -- திருவாலங்காடு ஒன்றியத் தலைவர்களும் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

கங்கை--காவிரி இணைப்பு செலவு ரூ. 2,250 கோடி

1,642 மைல் நீளமுள்ள கால்வாய் உருவாகும்

புதுடில்லி, ஆக. 23 —

கங்கை -- காவிரி ஆறுகளை இணைக்கும் திட்டத்துக்கு ரூ 2,250 கோடி செலவாகும்.

இத்திட்டம் முழுமைபெற 30 ஆண்டுகள் ஆகும்.

இதன் மூலம் கூடுதலாக 20 இலட்சம் ஏக்கர் நிலப் பரப்பளவு தீவிர விவசாயத்தின்கீழ் கொண்டுவரப்படும்.

கங்கை நதி முதலில், நர்மதை நதியுடனும், பின்னர் நர்மதா -- கோதாவரி ஆறுகளுடனும், பின்னர் கோதாவரி -- காவிரி ஆறுகளுடனும் இணைக்கப்படும்.

இந்த இணைப்பின் நீளம் 1,642 மைல்களாக இருக்கும்; இந்த இணைப்பு 661 மைல்கள் கால்வாய் வழியாகவும், 965 மைல்கள் நதி நீர் ஓட்டம் வழியாகவும் இருக்கும்.

பாட்னா அருகில் கங்கை நதியிலிருந்து 50 ஆயிரம் முதல் 60 ஆயிரம் கன அடி நீர் இணைப்புக் கால்வாய் மூலம் திருப்பிவிடவும் ஏற்பாடு செய்யப்படும்.

கங்கை -- காவிரி நதிகளின் இணைப்பால் பல்வேறு நன்மைகள் ஏற்பட்டாலும், முக்கியமாக நான்கு நன்மைகள் குறித்துக் குறிப்பிடப்பட்டுள்ளது; இத்தகைய இணைப்பு ஒரு மகத்தான சாதனையாக இருக்கும்; இதன் மூலம் பல மாநிலங்கள் நிலையான குடி நீர் வசதியைப் பெறும். கங்கு -- சிறு கப்பல் போக்குவரத்து ஏற்படும்; பல்வேறு மாநிலங்களில் தொழில் துறை வளர்ச்சி அதிகரிக்கும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அண்ணா கோபுரத்தில் சுழலும் ஓட்டல்

சென்னை, ஆக. 22—

"அண்ணா நகரிலுள்ள அண்ணா கோபுரத்தில் சுழலும் ஓட்டல் ஒன்றினை அமைக்க வீட்டு வசதி வாரியம் முடிவு செய்திருக்கிறது"

என்று சட்டப் பேரவையில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், வீட்டு வசதித் துறை அமைச்சர் க. இராசாராம் தெரிவித்தார்.

"சுற்றுலாத் துறை, இம்மாநிலத்திலுள்ள சுற்றுலாத் திட்டங்களுக்காகத் தனியாருக்குக் கடன் எதுவும் வழங்கவில்லை"

என்று மற்றொரு கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினார்; தொடர்ந்து அமைச்சர் கூறியதாவது:—

"சுழலும் ஓட்டல் அண்ணா கோபுரத்தில் அமைய இருக்கிறது; வீட்டு வசதி வாரியம் அதனை அமைக்கப் போகிறது."

சோணையா:—"சுழலும் ஓட்டல் என்பது குடை இராட்டினம் போல பக்கவாட்டில் சுழலுமா அல்லது ரங்கராட்டினம் போல மேல் -- கீழாகச் சுழலுமா?"

அமைச்சர்:—"உறுப்பினர், ஓட்டல் அமையும் வரையில் பொறுமையோடு இருந்தால் -- எப்படிச் சுழலும் என்பதை -- அதில் உட்காரவைத்துக் காட்டுகிறேன்."

வரலாற்றுக்குப் புதிய செய்தி

செங்கம் பகுதிக் கல்வெட்டுகளில் கண்டுபிடிப்பு

சென்னை, ஆக. 23—

"செங்கம் பகுதியில் தொல்பொருள் துறையினர் நடத்திய ஆராய்ச்சி மூலம், வரலாற்றுப் பெருமைமிக்க கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன"

என்று கல்வியமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் சட்டப் பேரவையில் தெரிவித்தார்.

இது தொடர்பாகக் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு நாவலர் பதிலளிக்கையில் மேலும் தெரிவித்ததாவது:—

"அங்கே சுமார் 60 நடு கற்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன; அவற்றில் பெரும்பாலனவை பல்லவர் காலத்தவையாகும்; சோழர் காலத்துக் கற்களும் உள்ளன; வேறு சில வரலாற்றுத் தகவல்கள் உள்ள கல்வெட்டுகளும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன; சிம்ம விஷ்ணு, மகேந்திரவர்மன், நரசிம்மவர்மப் பல்லவன் ஆகியோர் காலத்துக் கல்வெட்டுகளும் உள்ளன.

"ஒரு கல்வெட்டின் மூலம் வரலாற்றுக்குப் புதிய செய்தி ஒன்று கிடைத்துள்ளது; மகேந்திரவர்மப் பல்லவன் 30 ஆண்டுகள் ஆண்டதாகத் தான் வரலாறு கூறுகிறது; ஆனால், இந்தக் கல்வெட்டு மூலம் அவன் அறுபதாண்டுக் காலம் ஆட்சி நடத்தியதாகத் தெரியவருகிறது; இது மிக முக்கியமான சரித்திரக் குறிப்பாகும்."

தமிழ்நாடு எல்லைக்கு அருகில கண்ணகி சிலை

என். கே. பழனிசாமி:—"தமிழ்நாடு எல்லைக்கு அருகில -- கேரள மாநிலத்தில் கண்ணகி கோவில் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறதா?"

அமைச்சர்:—"தமிழ்நாடு எல்லைக்கு அருகில -- கேரளப் பகுதியில -- சுருளி மலைத் தொடரில காணப்படும் பழைய கோவில், வரலாற்றுப் புகழ் பெற்ற கண்ணகியின் கோவிலாக இருக்கலாம் என்று கூறப்படுகிறது; அதைப் புதுப்பித்துச் சிறப்பிக்க அக்காரியத்தை தமிழக அரசிடம் ஒப்படைக்கும்படி கேரள அரசிடம் கேட்கப்பட்டிருக்கிறது."

புதையல்பற்றி தகவல்?

வீராசாமி (தி.மு.க):—"செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள பல்லவ கல்வெட்டுகளில், 'தேவ பாஷை'யில் ஏதோ எழுதப்பட்டிருப்பதாகவும், அதில புதையல் பற்றிய தகவல் இருப்பதாகவும் சொல்லப்படுகிறதே -- உண்மையா?"

அமைச்சர்:—"கல்வெட்டுகளின் கீழே 'பிணப் புதையல்' தான் இருக்கிறதே தவிர, 'பணப் புதையல்' ஏதும் இல்லை."

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துறைமுகங்கள் உள்ளன; 2 பெரிய துறைமுகங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

இந்தியக் கடற்கரையில் உள்ள சிறிய துறைமுகங்களின் எண்ணிக்கை 167.

எல்லாத் துறைமுகங்களுடனும் இரயில்வே இணைப்பு இருக்கிறது; இதனால் துறைமுகங்களுக்குச் சரக்குகளைக் கொண்டு செல்லவும் -- கொண்டு வரவும் வசதியாக உள்ளது."